1987 மே 4]

அரசு அங்கீகாரம் அளித்தது. கற்சுவர் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் இராதாகிருஷ்ணன் நகரை ஒட்டியுள்ள பகுதிக்கு பாதுகாப்பு கிடைத்துள்ளது.

திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, இராதாகிருஷ்ணன் நகரிலே பாதிக்கப்பட்ட இடங்களில் குடியிருப்போருக்கு வேறு இடங்கள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். இது கடலரிப்பைப் பற்றியதால், கடலரிப்பு பற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது.

சித்த மருத்துவக் கல்லூரிக்கு அரசு பேருந்து

568—(*வினா எண். 4792) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அரசு பேருந்து கல்வி சுற்றுலா செல்ல வழங்கியும் அதனை மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கும் காரணம் யாது?

(ஆ) அதற்கென மாதம் 250 லிட்டர் டீசல் வழங்கப்படுகிறதா?

(இ) பேருந்து இயங்காத காலத்தில் அப்பணம் எப்படி செலவிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பாளையங்கோட்டையிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ள பேருந்து 1985 ஆம் ஆண்டு பழுதடைந்து, பழுதுநீக்க, பணிமனைக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அரசு சுகாதார போக்குவரத்துத் துறை வல்லுநர்கள் பார்வையிட்டு, பேருந்து பயனற்ற நிலையில் உள்ளது என்று சிபாரிசு செய்துள்ளனர்.

(ஆ) ஆம்.

(இ) பேருந்து இயங்காத காலத்தில் அப்பணம் ஒப்புவிப்பு செய்யப்படுகிறது.

Surrender

1987 மே 4]

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து பழுதடைந்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, புதிய பேருந்து ஏதேனும் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு இந்த ஆண்டு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இவ்வாண்டு அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

கன்னியாகுமரி தொகுதியில் மூலிகைப் பண்ணை

569—(*வினா எண் 7605) **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்க திட்டமிடப்பட்ட மூலிகைப் பண்ணை என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க நீர்ப்பாசன வசதியுடன் கூடிய தகுந்த நிலம் இதுவரை கிடைக்காமையால் மூலிகைப் பண்ணை அமைக்கப்பட வில்லை. இருப்பினும், மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் தகுந்த நிலத்தை கையகப்படுத்தி மூலிகைப் பண்ணை அமைக்க இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியா குமரி மாவட்டத்தில் வீரப்புலி ரிசர்விலும், மருத்துவா மலையிலும் பண்ணை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக் கின்றன என்று ஏற்கனவே இச்சட்டமன்றத்திலே சொல்லப் பட்டது. அங்கு அந்த மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு என்ன தடங்கல் ஏற்பட்டிருக்கிறது? அந்த இடத்திலே விரைவிலே அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வீரப்புலி காப்புக்காட்டில் 40 ஹெக்டேர் நிலத்தில் பண்ணை அமைக்க இப்பொழுது அரசு முயற்சி எடுத்தது. ஆனால், மத்திய அரசு